RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s126

OPEN ACCESS

# சங்க நூல்களில் கொல்லிப்பாவை

**பா. சாந்தி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி-627007, தமிழ்நாடு, இந்தியா.

# Kollippavai in Sangam texts

**P. Shanthi [a, *]**

[a] Department of Tamil, Sarah Tucker College, Tirunelveli-627007, Tamil Nadu, India.

* Corresponding Author: alexshanthi@gmail.com

Received: 24-03-2021
Revised: 05-01-2022
Accepted: 13-01-2022
Published: 25-02-2022

Check for updates

**ABSTRACT**

There are many songs in the Sangam texts about a mother goddess called Kollippavai. It is said to be a puppet written in the cave of Kolli, a puppet made by a goblin, and a puppet written by God himself. Given the diversity of the Tamil tradition, this phrase sets out to illustrate the concept of empathy. Although the word puppet has many dimensions such as paganism, puppetry, and divinity, there are various theories about their authenticity. Silappathikaram says that Kollippavai is a women. Thirumal dance Pavai Koothu Mogini Pavai dance Silappathikaram said that it was a later development. Mohini's appearance at the end of the Kshira Sagara is a later story. PL Sami's establishment in Tamil literature of the worship of the mother goddess can be found in the fact that Aathal's killer is also a kind of mother deity like the jungle. This article attempts to establish its authenticity through the Sangam verse.

**Keywords:** Kollippavai, Pavai Koothu, Kurunthogai, Natrinai, Silappatikaram, Ten Idylls.

## முன்னுரை

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் ஆத்தூர் தாலுக்காக்களிலுள்ள குன்றுத்தொடர், மொத்த நீளம் 17 மைல், இடையிடையே ஆழமான குறுகியப் பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. இதில் கொல்லிமலையர் என்ற மலைச்சாதியினர் வாழ்கின்றனர். கொல்லிமலைத் தேனுக்குப் பெயர் பெற்ற இடம் என்று சங்கப் பாடல்கள் கூறுகின்றன. இது கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில்ஓரிக்கு உரியதாக இருந்தது. இம்மலையில் கொல்லிப்பாவை என்ற பாவை இருந்ததாகத் தமிழ் நூல்கள் கூறுவதைக் கருத்தில் கொள்ளப்படுகிறது.

## கொல்லிப்பாவைப் பற்றித் தமிழ்கலைக் களஞ்சியம்

இது கொல்லிமலையிற் செய்து வைக்கப்பட்டிருந்த தெய்வப்படிமம்.

அவுணர் நீங்க

திருவின் செய்யோள் ஆடிய பாவையும். (Swaminatha Iyer, 2009)

கொடிய போர் செய்யச் சமைத்த போர்க் கோலத்துடன் மோகித்து விழும்படி கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்பவளாகிய திருமகளால் ஆடப்பட்ட பாவையென்னுங் கூத்து என வருவது கொல்லிப்பாவையின் இயல்பை விளக்கும், சீவகசிந்தாமணியில் (197) விசயைக்குப் பாவையை உவமையாகத் திருத்தக்கத்தேவர் கூறியதன் நயத்தை விளக்க வந்த நச்சினாக்கினியர் வேறு கருத்துச்

சொல்லாமல் தன்னையேக் கருதுவித்தலின் கொல்லிப்பாவையென்றார். இது கொல்லிமலையில் ஒரு பூதத்தால் அமைக்கப்பட்ட அழகியப் பாவையென்பதனைப் பயன் நிறைந்த பலாமரங்களையுடைய கொல்லி மலையின் மேற்பகுதியில் முன் பூதம் அமைத்த புதுமையான இயக்கமுடைய பாவை.

புதிது இயல் பாவை

விரிகதிர் தோன்றி இளவெயில் அன்ன

என வருந்தொடர் விளக்கும் மற்றும் இது அழியாத இயல்பினதென்பதைச் செவ்விய வேர்ப்பலவின் பயன் நிறைந்த கொல்லிமலையிலேத் தெய்வத்தாற் காக்கப்பெறும் குற்றம் நீங்கிய நீண்ட கொடுமுடியையும் அழகியப் பாவையாக இருப்பதை விளக்குகிறது (Ramasubramaniam, 2009).

இதைப்பற்றிய கதை கொல்லிமலையின் வளமிகுந்த நிலையைக் கண்ட முனிவரும் அமரரும் அதனை இருப்பிடமாகக் கொண்டனர். அப்போது அவர்களுக்கு அசுரராலும் இராக்கதராலும் இடையூறு நேர்ந்தது. அதனைத் தடுக்கத் தெய்வத் தச்சனைக் கொண்டு இப்பாவையை அமைத்தனர். இயங்கும் தன்மையுள்ள இப்பாவை அரக்கர் முதலியோரின் வாடைப் பட்டவுடன் நகைக்கும், கண்டவருடைய உள்ளத்தையும் விழியையும் கவர்ந்து, அவர்கட்குப் பெருங்காமநோயை உறுவித்து மயக்கிக் கொல்லுந்தன்மையுடைய இதனைக் கண்ட அரக்கர் முதலியோர் மயங்கி மடியலாயினர் (Rasamanikkanar, 2012a).

## குறுந்தொகையில் கொல்லிப்பாவை

நல்ல குறுந்தொகை என்னும் அடைமொழிக்கு உரிய நூல். குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது. தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பெற்ற நூல் குறுந்தொகையாகும். இந்நூலில் கொல்லிமலையின் ஒரு பகுதியில் செதுக்கப்பெற்ற பாவை ஒன்று இருந்தது. அது கொல்லிப்பாவை எனப்பட்டது. இதில்,

“பெரும்பூட் பொறையன் பௌமுதிர் கொல்லிக்

கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய

நல்லியல் பாவை அன்ன இடம்”

மேற்கண்ட பாடலின் வாயிலாக அறியலாம் (Swaminatha Iyer, 1937).

பெரியப் பூண்களையுடைய சேரனது அச்சம் முதிர்ந்த கொல்லி என்னும் மலையில் உறையும் பெரிய கண்ணையுடைய தெய்வம் அக்கொல்லிமலையின் மேற்புறத்தில் எழுதிய நல்ல இயலினையுடையப் பாவை வரையப்பட்டிருந்தன என்று கூறுகிறது. இப்பாடலில் பாறையின் மீது வரையப்பட்ட தெய்வ படிவம் என்பதைக் குறிக்கிறது. மேலும் இது பொறையன் என்ற சேரமன்னனுக்கு உரிய மலைக்கொல்லி எனக்கூறுகிறது.

மற்றொரு குறுந்தொகைப் பாடலில் கொல்லிமலை என்பது ஓரி என்ற குறுநில மன்னனுக்கு உரியதாக கூறுவதைக் காணலாம்.

கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்துண்ணும்

வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப்

பாவையின் மடவந்தனளே

மேற்கண்ட வரிகளின் வழி ஓரிக்குரிய மலை கொல்லி என்பதைக் கூறுகிறது (Swaminatha Iyer, 1937). இவ்விருப் பாடல்களிலும் கொல்லிமலை இருவேந்தர்களும் ஆண்டிருப்பதைக் காணமுடிகிறது. இப்பாடல்களிலும் குடவரையின் மீது வரையப்பட்ட ஓவியமாக காட்சிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதில் வலிய வில்லையுடைய ஓரி என்பானது கொல்லி என்னும் மலையின் மேலைப்புறத்து மலையிடத்துப் பாவையைப் போல என்றுக் கூறுகிறது. இவ்விரு பாடல்களிலும் நோக்கும் போது இது பாறையின் மீது வரையப்பட்ட ஓவியத்தைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

## நற்றிணையில் கொல்லிப்பாவை

நல்லத் திணையாகிய நற்றிணையில் கொல்லிப்பாவைப் பற்றி

“செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லித்

தெய்வம் காக்கும் தீது தீர் நெடுஞ்கோட்டு

ஊறுபல தோன்றினும் பெருநிலங்கிளரினுந்

திருநல உருவின் மாயா வியற்கைப் பாவை”

மேற்கண்ட வரிகளில் பலாமரங்களின் பழங்கள் பொருந்திய தெய்வத்தாலேப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற தீதுதீர்ந்த நடிய கொடுமுடியையும் அழகிய வெளிய அருவியையுமுடைய கொல்லி மலைச்சாரலில் காற்று மோதியடித்தாலும் வலிய மழை விரைந்து வீசினாலும் இடி முழங்கி மோதினாலும் வேறு பல ஊறுபாடுகள் தோன்றினும் பெரிய இவ்வுலகமே சினங்கொண்டு எதிர்த்தாலும் தன் அழகிய நல்ல வடிவம் கெடாத இயல்பினை உடைய பாவைப் போல என்று சுட்டுவதைக் காணலாம். ஆகையால் இப்பாடலை நோக்குமிடத்து இது கல்லில் செதுக்கப்படும் சிற்பக்கலையாகத் தோன்றுகிறது. ஆக இது கல்லில் வரையப்படும் ஓவியமா? அல்லது கல்லில் செதுக்கப்படும் சிற்பமா? என்ற ஐயப்பாட்டைப் போக்கி நிற்பதை நற்றிணைப்பாடல் தெளிவுப்படுத்துகிறது. இது சிற்பக்கலை அதாவது கல்லில் வரையப்படும் சிற்பம், பாறையில் வரையப்படும் சிற்பம் என்னும் தன்மை உடையதாகத் தோன்றுகிறது (Ramasubramaniam, 2009).

கொல்லிமலையில் ஒரு பகுதியில் செதுக்கப்பெற்றப் பாவை ஒன்று இருந்தது அது கொல்லிப்பாவை எனப்பட்டது. மேற்கண்ட குறுந்தொகை 89, மற்றும் 100 ஆகியப் பாடல்களில் பாறையில் உருவம் செதுக்கும் சிற்பக்கலையின் அறிவு அக்காலத்தில் இருந்தது என்பதற்கு இதுச் சிறந்த எடுத்துக்காட்டாகும். என்று இக்கொல்லிப் பாவையைப் பற்றிக் கூறுவதைக் காணலாம். (Rasamanikkanar, 2012b).

## பதினொரு வகை ஆடல்கள்

சிலப்பதிகார ஆசிரியர் காலத்துக் கூத்துக்கலையின் பெருமையை அறிய உதவுகின்றது. அக்காலத்தில் கூத்துக்கு அறுபத்து நான்கு கலைகளும் பற்றிய அறிவுத் தேவைப்பட்டதாகத் தெரிகிறது. மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்கள் பற்றி கூறுகின்றது. அவை (1) அல்லியம் (2) கொடுகொட்டி (3) கொடை (4) குடம் (5) பாண்டரங்கம் (6) மல் (7) துடி (8) கடயம் (9) பேடு (10) மரக்கால் (11) பாவை. இவற்றுள் முதல் ஆறும் நின்றாடுபவை. பின்னவை ஐந்தும் வீழ்ந்தாடுவனவாகும். இதனை,

பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து

பதினோர் ஆடலும், கொட்டும்

என்ற மேற்கண்ட அடிகளால் அறியலாம் (Swaminatha Iyer, 2009).

## இரு வேறு அறிஞர்களின் கருத்துகள்

“அவுணர் போர்க்காலத்திலிருக்கும் பொழுதுத் தன்னைக் கண்டு மோகித்து விழும்படி கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் ஆடப்பட்டப் பாவை என்னும் ஆடல்” என மா. இராசமாணிக்கனார் கூறுகிறார். மேற்கண்ட மாதவியாடியப் பதினோரு ஆடல்களைக் கருத்தில் கொண்டு இது ஆடல் கலையில் வருவதாகச் சுட்டப்படுகிறது.

மேற்கண்ட கருத்துக்களின் வாயிலாக மூன்றுவிதமான கருத்துக்கள் புலனாகின்றன. 1. “பி. எல். சாமியின் நூலில் அதாவது தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு என்பதில் தாய் தெய்வ வழிபாடு

எனவும்," சங்க நூல்களில் கல்லில் வரையப்படும் சிற்பக்கலையாகவும், சிலப்பதிகாரத்தின் பார்வையில் ஆடல்கலையாகவும் காட்சியளிப்பதைக் காணமுடிகிறது.

சங்க காலத்தை நோக்கும் போது பெருந்தெய்வ வழிபாடு ஆரிய வழிபாடு, ஆரியர், தமிழ் மரபோடு முரணித் தம் வழிபாட்டை நிலைநாட்ட முயன்றபோது, தமிழர் எதிர்த்தனராதல் வேண்டும். இக்கருத்துப் பொதிந்த மாங்குடி கிழார் பாடியப் பாடல் வருமாறு.

அடலருந்துப் பின்

குருந்தே முல்லையென்

றிந்நான் கல்லது பூவுமில்லை

கருங்கால் வரகெ இருங்கதிர்த்தினையே

சிறுகொடிக்கொள்ளேபொறிகிளர்அவரையொடு இந்நான்கு அல்லது குடியும் இல்லை

டிந்தான் கல்லதுணர்வு மில்லை

துடியன் பாணன் பறையன் கடம்பன்

றிந்நான் கல்லது குடியுமில்லை

ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி

ஒளிறேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக்

கல்லே பரவின் அல்லது

நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே"

வணங்கிப் பரவப்படுவன (Swaminatha Iyer, 1984). இதில் நடுகற்களன்றி வேறு கடவுளை வணங்குதல் இல்லை என்பது கடைசி இரண்டு அடிகளின் கருத்து எனத் தமிழ்மக்கள் வரலாறு நூலில் க.ப. அறவாணன் சுட்டுகிறார் (Aravanan, 2006).

## முடிவுரை

சங்க காலத்தில் நடுகற் வழிபாடு மட்டுமே இறை வழிபாடு, முன்னோர் வழிபாடு என்பது புலனாகும். ஆனால் அது கொல்லிப்பாவை என்பதைக் காணும் போது சங்கச் செய்யுள்களின் அடிப்படையில் கல்லில் வரையப்பட்ட சிற்பமாக இருப்பது இங்கு நடுகற் வழிபாட்டோடு தொடர் உடையது. பிற்கால சிலம்பில் அது ஆடல் கலையாக வளர்ச்சி பெற்றது புலனாகிறது. இங்கு பி.எல்.சாமியின் தாய் தெய்வ வழிபாடு முறையில் எடுத்துக் கொண்டால் கொல்லிப்பாவை, பெண் தெய்வ அல்லது தாய்த் தெய்வ வழிபாட்டுடன் பொருந்துவதாக இல்லை.

## References


Aravanan, Ka.Pa., (2006) Tamil Makkal Varalaru, Tamilkottam, Chennai, India.

Ramasubramaniam, V.T., (2009) Natrinai (Moolamum Uraiyum), Thirumagal Nilayam, Tamil nadu, India.

Rasamanikkanar, M., (2012a) Kalaigal, A.K.L. Publishing, Chennai, India.

Rasamanikkanar, M., (2012b) Patthupattu aarachchi, Sahitya Akademi Award, Chennai, India.

Sami, P.L., (2002) Tamil ilakkiyankalil Thai Deiva Valipadu, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (1937) Kurunthogai, U.V.Sa, Library, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (1984), Purananooru Moolamum Uraiyum, U.V.Sa Noolaga nilayam, Chennai, Tamil Nadu, India.

Swaminatha Iyer, U.V., (2009) Silappathikaram Mulamum Uraium, U.V.Sa, Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License